**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : DW-1 | Date | : 21.01.2025 |
| Case No. | : **O.S. 492/2019** | Nationality | : Indian |
| Name | : முகமது ஆரிப் | Religion | : |
| Father's/Husband's Name | : அப்துல்ஹமீது | Age | : 67 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>பி.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரைக்கு விவரம் சொன்னது யார் என்றால் நான்தான் சொன்னேன். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். வாதி என்னென்ன சர்வே எண்களில் கண்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சர்வே எண்.144/2 பி, 155, 156/1 பி, 145/2, 146/2 ஏ, 147, 146/2 பி மற்றும் 148/2 ல் கண்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 18 ஏக்கர் 14 செண்ட் விஸ்தீரணம் ஆகும். மேற்படி சொத்தினை 2010 ம் ஆண்டு மே மாதம் முதல் நாளது தேதி வரை நானோ எனது குடும்பத்தாரோ சாகுபடி செய்து வந்தோம் என்பதை காட்டுவதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நாங்கள் சாகுபடி செய்ததற்கான ஆவணம் தாக்கல் செய்ய வேண்டியதில்லை 3 ஆண்டுகள் சாகுபடி செய்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோம். நான் அவ்வாறு சாகுபடி செய்ததற்கான ஆவணங்கள் எதுவும்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி என்னென்ன ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டடப்படுட்ம வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையான குத்தகை வரவு ரசீதுகளில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. அந்த ஆவணங்களை கைரேகை நிபுணரின் ஆய்வுக்கு அனுப்புவதில் எனக்கு ஆட்சேபனையில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் போலியாக எனது கையொப்பத்தை இட்டுள்ளதாக நாளது தேதி வரை காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் உள்ள கையொப்பம் என்னுடையது என்பதால்தான் நான் புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை வாதி சாகுபடி செய்து வந்து அதற்கு பயிர் காப்பீடு செய்யப்பட்ட வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணங்களை வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. தாவா சொத்துக்களை வாதிதான் சாகுபடி செய்து வருகிறார் என்று கிராம நிர்வாக அலுவலர்கள் பிரபாகரன், ஜெயபாண்டியன், ஹேமசந்திரன் மற்றும் கார்த்தி ஆகியோர் சான்று வழங்கியுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சான்றுகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி கிராம நிர்வாக அலுவலர்கள் தவறாக சான்று வழங்கியதாக வட்டாட்சியரிடம் புகார் எதுவும் அளித்தேனா என்றால் வழக்கு நடைபெறுவதால் புகார் அளிக்கவில்லை. அணைக்குடி கிராமத்தில் பணிபுரிந்து வந்த கிராம நிர்வாக அலுவலகர்கள் எவரும் நான் தாவா சொத்தினை சாகுபடி செய்து வந்ததாக சான்று எதுவும் கொடுக்கவில்லை என்றால் நான் லோன் எதுவும் பெறவில்லை என்பதால் சான்று எதுவும் பெறவில்லை. வாதிக்கு எதன்

அடிப்படையில் சான்று கொடுத்தார்கள் என்று தெரியவில்லை.

3. பொதுவாக பயிர் காப்பீடு செய்யப்பட்டால் சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர் அந்த சொத்தினை பார்வையிட்டுதான் காப்பீடு வழங்கப்படும் என்றால் அவ்வாறு யாரும் சொத்தினை பார்வையிட்டதாக எனக்கு தெரியவில்லை. கிராம நிர்வாக அலுவலர் பிரபாகரன் கோட்டாட்சியர் விசாரணையில் வாதி தாவா சொத்தை சாகுபடி செய்து வருவதாக அறிக்கை அளித்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவ்வாறு திருவிடைமருதூர் வருவாய் ஆய்வாளரும் மற்றும் மண்டல துணை வட்டாட்சியர் மற்றும் திருவிடைமருதூர் வட்டாட்சியர் அறிக்கை அளித்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது என்றாலும் அதன் அடிப்படையில் கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றாலும் சரியல்ல. காவல் நிலையத்தில் புகார் அளித்ததின் அடிப்படையில்தான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. இரு தரப்பினரையும் விசாரித்து முழு விசாரணைக்கு பிறகு கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவினை ஆட்சேபித்து நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனு எனக்கு பாதகமாக தீர்மானிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு பாதகமாக தீர்மானிக்கப்படவில்லை. இரு தரப்பினரும் அறுவடை செய்து தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. கோட்டாட்சியர் உத்தரவை ரத்து செய்யக்கோரி நாங்கள் கோரிய பரிகாரம் மேற்படி நீதிப்பேராணை மனுவில் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். இரு தரப்பினரும் அறுவடை செய்ய உத்தரவிடப்படவில்லை என்றாலும், வருவாய் துறையினருக்குதான் அறுவடை செய்ய உத்தரவிடப்பட்டது என்றாலும் சரிதான். நானோ எனது குடும்பத்தாரோ தாவா

சொத்துக்களை சாகுபடி செய்வதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. வாதி தாக்கல் செய்துள்ள முதல் ஆவணத்தை தவிர மற்ற அனைத்து ஆவணங்களும் அரசு அலுவலர்களால் வழங்கப்பட்டுள்ளதால் அவை உண்மையானது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.170/2018 வழக்கு எனது மனைவி சம்சாத்பேகத்திற்கு எதிராக கார்த்திகேயன் என்பவரால் தாக்கல் செய்துள்ள வழக்கு என்றாலும் அதில் நானும் வாதியும் தரப்பினர் அல்ல என்றாலும் சரிதான். ஆனால் ரமேஷ் அந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஒப்பந்ததில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். நான் சொன்னவாறு ரமேஷ் எந்த ஒரு ஒப்பந்தத்திலும் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரய ஒப்பந்தம் மற்றும் வரவு ரசீது சட்டப்படி பதிவு செய்யப்பட்டது என்பதால் அதை நான் போலியானது என்று சொல்ல முடியாது என்றால் சரியல்ல. மோகனசுந்தரம் என்னையும் எனது மனைவியையும் ஏமாற்றி பல வெற்று பத்திரங்களில் கையொப்பம் பெற்றுக் கொண்டார் என்று காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளித்துள்ளேனா என்றால் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை. ஆனால் அந்த ஆவணங்களின் அடிப்படையில் நீதிமன்றத்தில் 2 எஸ்.டி.சி வழக்குகள் தாக்கல் செய்துள்ளார்கள். நான் சொல்வதுபோல மோகனசுந்தரம் என்மீது காசோலை மோசடி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அவர் தாக்கல் செய்யவில்லை அவரது ஆட்கள் தாக்கல் செய்துள்ளார்கள்.

6. தாவா சொத்தினை வாதி குத்தகைதாரர் என்ற முறையில் சாகுபடி செய்து வருவதால் நான் அவரை சட்டத்திற்கு புறம்பாக காலி செய்ய முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதியின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வாதி என்னை தாவா சொத்தின் உரிமையாளர் என ஒப்புக்கொண்டு சட்டத்திற்கு புறம்பாக தாவா

சொத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அவர் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள நெல்லை விற்பனை செய்வதற்கு வாதி பெயரில்தான் தமிழ்நாடு வேளாண்மை விற்பனை கூடத்தில் சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு நெல் விற்பனை செய்ததற்கான ரசீது வாதிக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.01.22 15:29:22 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.